**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 32** **நாள்: 07.03.2018**

## பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 32 சென்னைப் பள்ளிகளில் 11–ம் வகுப்பு பயிலும் 5,383 மாணவ, மாணவியர்கள் அரசு பொதுத்தேர்வினை எழுதினார்கள் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 32 சென்னைப் பள்ளிகளில் 11ம் வகுப்பு பயிலும் 5,383 மாணவ, மாணவியர்கள் இன்று (07.03.2018) அரசு பொதுத்தேர்வினை 14 மையங்களில் எழுதினார்கள் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 32 சென்னைப் பள்ளியைச் சார்ந்த 2,078 மாணவர்களும், 3,305 மாணவியர்கள் என மொத்தம் 5,383 மாணவ, மாணவியர்கள் 11–ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வினை 14 மையங்களில் எழுதினார்கள். தேர்வு எழுதும் மையங்களில் மாணவர்களுக்கு எவ்வித கவனச்சிதறல் மற்றும் இடையூறு ஏற்படாத வகையிலும், தடையில்லா மின்வசதி, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி மற்றும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் தேர்வு மையங்களுக்கு எளிதில் சென்றுவர சாய்தள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சென்னைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சிறந்த மதிப்பெண்கள் பெறுவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, 100 சதவீத தேர்ச்சியினை பெற்றிட கற்றலில் பின்தங்கிய மாணவ, மாணவியர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு, காலை முதல் மாலை வரை சிறப்பு பயிற்சி வகுப்புகள் எடுக்கப்பட்டது. சிறப்பு பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட மாணவ, மாணவியர்களுக்கு காலைச் சிற்றுண்டி, மதிய உணவு, மாலை சுண்டல் ஆகியவை வழங்கப்பட்டன. கற்றலில் சிறந்து விளங்கிய மாணவ, மாணவியர்களுக்கு மாநில அளவில் மதிப்பெண்கள் பெற்றிட வழிகாட்டி பயிற்சி வகுப்புகளும் எடுக்கப்பட்டது.

அரசு பொதுத்தேர்வினை எழுதும் அனைத்து மாணவ, மாணவியர்களும் தேர்வினை நல்ல முறையில் எழுதி அதிக மதிப்பெண்கள் பெற்றிட பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துகளை தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**